செய்தி வெளியீடு எண்:84 நாள். 08.02.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் தீவன சோளப்பயிர் வளர்க்க அரசு மானியம் வழங்கப்படுகிறது. என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

~~~~~

தற்போது நிலவும் வறட்சியினால் கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள தீவனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பின் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் ரூபாய் எட்டு இலட்சம் செலவில் குறுகிய கால பசுந்தீவன உற்பத்தித் திட்டம் அமல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் குறுகிய காலத்தில், குறைந்த பாசன வசதியில் அதிக அறுவடை செய்யக்கூடிய தீவனச்சோளத்தினை விவசாயிகள் நிலத்தில் பயிரிட்டு பயனடையலாம். ஒரு ஏக்கர் பரப்பளவில் தீவனச்சோளம் உற்பத்தி செய்ய ஆகும் நடைமுறை செலவு ரூ.4000/- ஆகும். இதில் அரசு மானியமாக ஒரு ஏக்கருக்கு ரூ.2000/- விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

தீவனச்சோளத்தினை விவசாயிகள் கால்நடைகளுக்கு பசுந்தீவனமாகவும் அல்லது உலர வைத்து சோளத்தட்டையாகவும் வழங்கலாம். விதைத்த 50 நாட்களில் ஒரு ஏக்கருக்கு 10 டன்கள் பசுந்தீவனமாக அறுவடை செய்யலாம்.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள இரண்டு இலட்சம் கால்நடைகளுக்கும் வறட்சி காலத்தில் பசுந்தீவனம் கிடைக்கும் பொருட்டு இத்திட்டம் 400 ஏக்கரில் அமுலாக்கப்படவுள்ளது.

எனவே திருவள்ளூர் மாவட்டத்தில் சிறிதளவு தண்ணீர் பாசன வசதியுடன் குறைந்தபட்சம் 1 ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகள் மானிய தொகை பெறுவதற்கு அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களில் பிப்ரவரி 15-ம் தேதிக்குள் விண்ணப்பக்கிலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~